முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

# மகான் அதிபத்தர் நாயனார் அருளிய அருள் பிரசன்ன ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

22.01.2020, புதன்கிழமை

1. சைவத்தின் காவலனே அரங்கா
சடாட்சர சக்தியாக வந்தநல்
அவதாரமே ஆறுமுக ஞானியே
அரங்கனே உன்பெருமை கூறி

2. கூறியே சித்தர்களை தொடர்ந்து
குவலயத்தில் நாயன்மார்களும் இனி
தெரிவிப்போம் அருள் பிரசன்ன ஆசியை
தேசிகனுக்கு அதிபத்தர் நாயனார் யானும்

3. யானும் விகாரி கலை திங்கள்
உயர்வான அட்டமதிகதி புந்திவாரம்
(விகாரி வருடம் தை மாதம் 8ம் நாள் 22.01.2020, புதன்கிழமை)
ஞானயுகம் அமைய உரைப்பேன்
ஞானதேசிகன் அருளுபதேச வழிகளை

4. வழிகளை உலக மக்கள் ஏற்று
வணங்கி தொடர்ந்து வருக
அழியாமை எனும் பேரற்புதம்
அகிலத்தார் அடைந்து சிறப்பர்

5. சிறப்புதரும் சைவ நெறிகளை
செகமெங்கும் மக்கள் ஏற்கவே
மறுப்பில்லாத வண்ணம் பரப்பி
மக்களிடை கலந்திட வகை செய்ய

6. செய்யவே சிறப்பான மாற்றம்
செகமெங்கும் சடுதி கண்டிட
அய்யன் முருகப்பெருமானின்
அருள் துணை உலகோர்க்கு கிட்டும்

7. கிட்டவே தடைபடா தருமம்
குவலயமெங்கும் மக்களை நோக்கி
தட்டாது அரங்கன் தருமம் பரவிட
தயவாக மக்களிடை கலந்திட

8. கலந்திட கலியுக மக்களுக்கு
கவலைகளில்லா ஞான வாழ்வும்
பலமான பாதுகாப்பு வளமும்
பரிபக்குவமும் தெளிவும் திடமும்

9. திடமும் அரங்க ஞானியர் ஆசிபட
தெரிவிக்க அணுகும் மக்களடைந்து
இடரில்லா ஞானவான்கள் ஆவர்
இயம்பிட ஆறுமுகனார் சக்தியான

10. சக்தியான பிரணவக் குடிலை
சைவத்தின் தலைமை பீடமான
பக்திமிகு ஏழாம்படை வீட்டை
பாருலகோர் வணங்கி வருக

11. வருகவே தொடர்பை கூட்டி
வாழும் ஞானியரின் தீட்சை பெற்று
முருகா முருகா எனும் செபம் முழங்க
முழுமையான ஞானயுகமாற்றம் காணும் அருள் பிரசன்ன ஆசி முற்றே.

-சுபம்-

முருகப்பெருமான் துணை

மகான் அதிபத்தர் நாயனார் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :

ஜீவதயவே வடிவான சுத்த சைவநெறியின் காவலனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே சடாட்சரமாகிய சரவண ஜோதியின் மகாசக்தியாக வந்துதித்த முருகப்பெருமானின் அவதார ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி இதுவரை அரங்கா உமக்கு சித்தர் பெருமக்கள் ஆசி நூல் உரைத்திட்டதைத் தொடர்ந்து இவ்வுலகம் கடைத்தேறிடவே நாயன்மார்கள் அறுபத்து மூவர் நாங்களும் அரங்கனுக்கு நூல் உரைக்கின்றோம். அது வகையிலே விகாரி வருடம் தை மாதம் 8ம் நாள் 22.01.2020, புதன்கிழமையான இன்றைய தினமதனிலே அதிபத்த நாயனார் யானும் அருள் பிரசன்ன ஆசி நூல்தனையே அரங்கனுக்கு உரைக்கின்றேன் என்கிறார் மகான் அதிபத்த நாயனார்.

உலக மக்களுக்கு தாயினும்மிக்க கருணை கொண்டு ஞானமளிக்கும் ஞானதேசிகன் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் கூறும் நல்உபதேசங்களை உலக மக்கள் எல்லாம் ஏற்றுக் கொண்டு அரங்க மகானை உள்ளத்தில் நிறுத்தி குருவாய் ஏற்று வணங்கி வழிபாடுகளை செய்வதுடன் அரங்க மகான் காட்டிய நெறிமுறைகளின்படி வாழ்ந்து வர அழிவிலாமை என்கிற பேரற்புதம் தூயநெறி வந்தோரெல்லாம் அடைந்து சிறப்படைவார்கள்.

உலக மக்களிடத்து உயிர்க்கொலை தவிர்த்து புலால் மறுத்து சுத்த சைவ உணவினை மேற்கொள்கிறதான சுத்த சைவநெறி விரைந்து பரவிட வேண்டும். உலக மக்கள் சுத்த சைவநெறியினை ஏற்று கடைப்பிடித்து வர உலகம் பலவிதமான சிறப்புமிக்க நல்ல மாற்றங்களை காணுமப்பா. உலக மக்கள் சுத்த சைவநெறியினில் நடந்திட அவர்களுக்கு ஐய்யன் முருகப்பெருமானின் அருள் துணை கிடைத்திடும். உலக நலன் கருதி ஆறுமுக அரங்க மகான் தொடர்ந்து செய்யும் பெருந்தர்மமானது தடைபடாமல் தொடர்ந்து நடப்பதுடன் அரங்கரின் தர்மம் மேலும் மேலும் விரிவடைந்து உலகமெங்கும் பரவிட மக்களிடையே தர்மசிந்தை பெருகிடும், தயவு உணர்வாக மாறிடும். மக்களிடையே தயை சிந்தை பெருகி மக்கள் தர்மங்களை செய்திட

செய்திட தர்மபலம் பெருகி கலியுகம் தனது வலுவினை இழக்கும். கலியுக துன்பம் நீங்கி மக்களுக்கு கவலையற்ற நிம்மதியான ஞானவாழ்வு அமைவதோடு ஞானிகளின் அருள்பலம்மிக்க அருள் பாதுகாப்பு உண்டாகும். சர்வ வளம் பெருகி மக்களுக்கு பரிபக்குவமும் ஞானத்தெளிவும் மனோதிடமும் உண்டாகும். அரங்கனை நாடி வந்த மக்களுக்கு இவை பலன்கள் பூரணமாய் கிடைப்பதோடு ஞானவான்களாகவும் ஆகி சிறப்படைவார்கள்.

முருகப்பெருமான் சக்தியே வடிவான துறையூர் ஓங்காரக்குடிலினை சுத்த சைவத்தின் தலைமை பீடமாகிய பக்தி மிக்க ஏழாம் படைவீட்டை உலக மக்கள் பயபக்தியுடன் வணங்கி வர தொடர்ந்து ஓங்காரக்குடிலிற்கு வருகைதந்து அரங்க மகானை தரிசனம் செய்து அரங்கரிடத்து தீட்சை உபதேசம் பெற்று உபதேசவழி நடந்து தினம் தினம் தவறாமல் முருகா முருகா என ஜெபதபங்களை செய்து வரவர உலகின் தவபலமும் தானபலமும் பெருகி இந்த உலகம் முழுமையான ஞானயுகமாக மாற்றம் அடையும் எனக் கூறுகிறார் மகான் அதிபத்தர் நாயனார்.

-சுபம்-